வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பாவேந்தரும் இந்திய விடுதலை இயக்கங்களும்

**லூ. அருண் பிரகாஷ்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -2

**ஆய்வுச்சுருக்கம்**

ஆங்கிலேயரின் ஆட்சிப்பிடியில் இருந்த இந்தியா 1947-இல் ஆகஸ்ட் 15 ஆம் நாள் விடுதலையடைந்தது என்பது வரலாறு. அந்த விடுதலைக்காகப் பலர் தங்களின் வாழ்க்கையினையும், உயிரினையும் அர்ப்பணித்தனர். அதில் பாவேந்தர் தனது எழுத்துகளால் எழுச்சி மிகுந்த கருத்துகளைப் பதிவு செய்து விடுதலை வேட்கைக்குத் தூண்டுகோலாக அமைந்தார். பாவேந்தர் இளமையில் கொண்ட விடுதலை உணர்வு, பாரதியின் வழிகாட்டுதல், பிற தேசியத் தலைவர்களுடனான உறவு, கவிதைப் படைப்பாக்கம், காந்தியத்தின் மீதான ஈடுபாடு, ஆயுதப்புரட்சி ஈடுபாடு ஆகிய நிலைகளில் தன் பங்களிப்பை வழங்கியுள்ளார்

**திறவுசொற்கள்**

மெய்ஞ்ஞானக் கவிஞர், இராட்டினப்பாட்டு, பொதுவுடமைப்புரட்சி, சமத்துவப் பார்வை, பெண்ணுரிமை, பகுத்தறிவு, மக்களாட்சி அரசியல், தமிழுரிமை

**முன்னுரை**

உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திடும் வகையில் இந்தியா தனது விடுதலை வரலாற்றை இம்மண்ணில் பதிவு செய்துள்ளது. காரணம் வாணிகம் மேற்கொள்ள வந்த ஆங்கியேர்கள் ஆட்சியைக் கைப்பற்றி அடிமைப்படுத்தியதால் நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பின் இந்திய திருநாடானது விடுதலை பெற்றது. போராட்டக்களம் கண்டு விடுதலைக்குத் துணைநின்றதைப் போன்று தம் சிந்தனையால் விடுதலைக் கருத்துக்களைப் பரப்பியவர்களின் பங்களிப்பும் மிகச் சிறப்பாகவே இருந்தது. அத்தகைய

கருத்தியல் ரிதியான சில சிந்தனைகளுக்கு அடிகோலிட்டவர்களுள் பாரதிதாசனும் ஒருவர் அவர் ஆற்றிய பங்கினைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பாவேந்தர் பாரதிதாசன்**

புதுவையில் வாழ்ந்து வந்த கனகசபை முதலியார்க்கும் இலக்குமி அம்மையாருக்கும் 1891 ஏப்ரல் 29இல் பிறந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம் ஆகும். இவர் சிறுவயதில் பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றாலும் இவாின் ஆர்வம் முழுமையும் தமிழ்மொழியின் மீது இருந்தது. இவர் தனது 18 வயதிலேயே கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்றார். தமிழின் மீது கொண்ட ஈடுபாட்டால் தன்னுடைய உணர்வுகளைக் கவிதையாக வெளிப்படுத்தினார். மேலும் ‘பகைப்புலம் மாய்த்திடுவோம்’ என்று வீரக்குரல் கொடுத்த மறுமலர்ச்சிச் சிந்தனையாளர். விடுதலை இயக்கம், மறுமலர்ச்சி இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பொதுவுடமை இயக்கம் எனத் தனது இயக்கப் பணியினை ஆற்றிவந்தார். நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாகிய பாரதிதாசன் 1964 ஏப்ரல் 21 ஆம் நாள் இறந்தார்.

**விடுதலை உணர்வின் தொடக்கம்**

மெய்ஞ்ஞானக் கவிஞரைப் போன்று உலகப்போக்கினை முன்பே அறிந்தவராய், ஆழமாகச் சிந்தித்துத் தனது கருத்துக்களைப் பாமரனும் படித்துணரும் வண்ணம் சீர்மிகு கவிதைகளைப் படைத்தார். அவை ஆற்றல்மிக்க கவிதைகளாகவும், உணர்ச்சியினைத் தூண்டுகின்ற கவிதைகளாகவும் இருந்தன.

“ஊரெல்லாம் விடுதலை முழக்கம் மேவுக

காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!

உண்ணுமுன் விடுதலை முழங்கி உண்க!

உறங்முன் விடுதலை முழங்கி உறங்குக!”[1]

என்பன போன்று பல்வேறு விதமான உணர்ச்சிமிகு கவிதைகளின் வாயிலாக மக்களிடையே போராட்ட உணர்வினைத் தூண்டினார் பாரதிதாசன்.

கவிஞரின் வாழ்க்கைப் பயணமானது கடல்போல் அகன்று காணப் பெறுகின்றது. “இவரது வாழ்க்கையினை இரண்டு முறைகளாகப் பகுத்துக் கூறுவர். அவை,

(i) காங்கிரஸ்காரர் (1928 தொடக்கம் வரை)

(ii) பகுத்தறிவாளர்

என இருநிலைகளாகப் பகுத்துக் கூறுவர்.”[2] சின்னஞ்சிறு வயதில் கனக சுப்புரெத்தினம் என்ற தனது இயற்பெயரைப் பாரதிதாசன் எனப் பெயர் மாற்றிக் கொண்டதோடு மட்டுமல்லாது பாரதியினைப் போன்று உயரிய சிந்தனையும் கொண்டிருந்தார். புதுச்சோரியில் வசித்தவராக இருந்தாலும். இந்தியத் தாய் திருநாட்டின் மீது தீராப் பற்று கொண்டிருந்தார். இதன் விளைவாய் “தான் ஓர் இந்தியன்’ என்ற எண்ணத்தில் திளைத்தவராக,

“தேர் நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்

போர் நின்ற வீரர்குலம் பூத்தநிலம் - பார்நின்று

அடல்வளர்த்துப் பாரதநற் புத்திரன் நான் ஆக

உடல் வளர்த்த நாடு என் உயிர்”[3]

என்று கூறி இந்த பூமித்தாயின் சிறப்புகளைக் கூறியதோடு மட்டுமல்லாது பாரதத் தாய் திருநாட்டினை என்னுடைய உயிர் எனவும் கூறியுள்ளார் பாவேந்தர். தன்னுடைய இளமைக்காலத்தில் இந்திய தாய்த்திருநாட்டின் மீது பற்றுக் கொண்டவராகத் திகழ்ந்த பாவேந்தர் “காசி லட்சுமண பிரசாத் என்பவர் புதுவையில் மிட்டாய் கடை ஒன்றை நடத்தி வந்தார். அக்கடையின் பெயர் வேல் நிலையம். இஃது உள்ளூர் அரசியல், தேசியம் போன்ற துறைகளில் ஈடுபாடுள்ளவர்கள் சந்திக்கின்ற இடமாக திகழ்ந்தது. இதன் மூலமாக லட்சுமண பிரசாத் பாவேந்தருக்கு நெருக்கமாகிடவே விடுதலை உணர்வினைத் தூண்டுகின்ற வண்ணம் நூற்கள் படைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க 20 சிறு நூற்களை எழுதினார்.”[4] அவை அனைத்து ஒத்துழையாமைக் கருத்தினை வலியுறுத்துகின்ற நூல்களாகும். அவற்றுள் சில அச்சிடப்பெற்றனவாக கூறப்பெறுகின்றன. அவற்றுள் இராட்டினப்பாட்டு ஒன்றே ஸ்ரீ.சி.சுப்ரமணிய பாரதி இராட்டினப்பாட்டு என்னும் தலைப்பில் வெளியாகியுள்ளது.

1930களில் அச்சான இந்த ‘கதர் இராட்டினப்பாட்டு’ பல்வேறு விதமான தனிச்சிறப்புகளை உடையது. மேலும் இதுபோன்ற தலைப்பில் தனிப்பாடல்கள் யாரும் பாடியதாகத் தொியவில்லை.

**விடுதலை வீரர்களின் தோழமை**

இந்திய நாடு அகன்று விரிந்த மிகப்பொிய நாடாகும். இதில் விடுதலைக்கான போொியக்கங்களைத் தோற்றுவித்த சிறப்பினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு பெறுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கப் பல்வேறு விதமான போொியக்கங்கள் தோன்றின என்று ம.பொ.சிவஞானம் குறிப்பிடுகின்றார். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களாகிய ராம்மோகன்ராய் (1774), தயானந்த சரஸ்வதி(1824), இராமலிங்கர்(1823), இராமகிருஷ்ணன்(1836) என்னும் நான்கு பெருமக்களும் ஒரு குறிப்பிட்ட கருத்தினை ஒழித்திட வேண்டும் என்ற மனப்பாங்கினைக் கொண்டிருந்தனர். அவை,

”சாதிய வேறுபாடுகளை ஒழித்தல்

பெண்ணடிமைத் தனத்தினை ஒழித்தல்

ஆணும் பெண்ணும் சமம்”

என்ற நிலையை உருவாக்குவதே இவர்களின் கருத்தாகும். இதனைப் பாரதியாரும் முன்மொழிகின்றார். அதன் பின் 9 ஆண்டுகள் கழித்து வந்த பாவேந்தரும் இதனை முன்மொழிந்தவராகக் காணப்பெறுகின்றார். மேலும் 19ஆம் நூற்றாண்டின் பின்நாளில் தமிழகத்தின் நிலை குறித்துப் பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்.

“பூ மண்டலத்தில் மாபெரும் விழிப்பு ஒன்று வரப்போகின்றது. அதில் முதலாவதாக இந்தியா விழித்து இருபது ஆண்டுகள் ஆகின. அதன் பின்பே தமிழகம் கண் விழித்தது. ஆனால் இன்னமும் கூட வினைதொியாமல் கண்ணை விழிப்பதும், மூடுவதுமாக இருக்கின்றது”5 என்று எழுதுகின்றார்.

1. அரங்கத்திலாடுவது 2. திரைக்கு பின்னே இருந்து புகழறியாமல் பாடுவது. என இருவகையாக நாட்டுப்பற்றாளர்கள் பாகுபடுத்தப்படுகின்றனர். புதுவை மாநிலத்திற்குப் பாரதியார் வருவதற்கு முன்பே பாவேந்தர், பாரதியாரின் விடுதலை உணர்ச்சினைத்

தூண்டும் பாடல்களைப் பாடினார். வாய்ப்பு கிடைக்கின்ற போதெல்லாம் பாவேந்தர் செல்லுகின்ற திருமணங்களில் ‘சுதேச கீதத்தைப்’ பாடினார். அதன்பின் புதுவை மாநிலத்தில் அடைக்கலம் புகுந்த பாரதியாரோடு இணைந்து 12 ஆண்டுகள் பணியாற்றினார் பாவேந்தர்.

பாவேந்தரும் பாரதியாரும் இணைந்து பணியாற்றிய காலத்தில் தனக்கான ஒரு வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது என்று எண்ணி விடுதலை இயக்கப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

“வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்

வேறொன்று கொள்வாரோ? - என்றும்

ஆரமு துண்ணுதற்கு ஆசைகொண்டார் கள்ளில்

அறிவை செலுத்துவாரோ? (வீரசுதந்திரம்)”[6]

என்னும் பாரதியாரின் பாடலைத் தன்யாசி ராகத்தில் உணர்ச்சிப் பெருக்குடன் பாடி பாரதியாரால் பாராட்டப் பெற்றார்.

1908ஆம் ஆண்டு முதல் 1920 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்திய விடுதலைக்குக் குரல் கொடுத்த பலரும் புதுவை நகரில் அடைக்கலம் புகுந்தனர். அவ்வாறு புதுவை நகருக்கு வந்த வந்தே மாதரம் பத்திரிக்கை ஆசிரியர் அரவிந்தர், புரட்சிவீரர் வ.வே. சுப்பிரமணியன், கப்பலோட்டிய தமிழர். வ.உ.சி ஆகியோர் வந்தனர். பாரதியாரின் மூலமாகப் பாவேந்தருக்கு அவர்களின் நட்பு கிடைத்தது. அதனோடு நின்று விடாது எத்திராஜ் சுரேந்திரநாத் ஆரியா புதுவை சென்று சிறிதுகாலம் பாரதியாரின் நண்பராகத் திகழ்ந்தார். தங்களுடைய மாநிலத்தில் தங்கியிருந்த தமிழக தேசபக்தர்களை மனதில் கொண்டு அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்தார். மேலும் புதுவை மாநிலம் தேசபக்தர்களின் யாத்திரைத் தலமாக மாறியது. இவ்வாறு அங்கு தங்கியிருந்த தமிழர்களை அந்நகரவாழ் மக்கள் ‘சுதேசிகள்’ என்றே குறிப்பிட்டனர்.

இந்திய விடுதலைப் போராட்டக்காரர்களில் பெரும்பாலானோர் புதுவையில் குடியேறிய நிலையில் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாது “நமது தேசத்தின் அரசாட்சியினை மீட்பதற்கு வழிவகை செய்து

கொண்டிருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திர வெறியானது கருத்துப் பாிமாற்றத்தின் விளைவால் நாடு முழுவதும் சுடர்விட்டு எறிந்து கொண்டிருந்து என வ.உ.சி எழுதுகின்றார்."[7]

அதனோடு பாரதியாரின் சுதந்திர தாகத்தை வெளியிடும் இதழாக 'இந்தியா' 1907இல் தொடங்கப்பெற்றது. அதில் வ.உ.சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், பாலகங்காகர திலகருக்கு ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் வழங்கிய ஆங்கிலேயே அரசினை எதிர்க்கும் வண்ணம் பாரதியார் கேலிச்சித்திரங்களையும் கட்டுரைகளையும் எழுதி இந்தியா பத்திரிக்கையின் மூலமாகக் கருத்தினை மக்களிடையே கொண்டு சேர்ந்தார். மேலும் பாரதியார் பாடிய பாடல்களில் ஒன்றான,

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரிர்

நிதி குறைந்தவர் காசுகள் தாரிர்

அதுவுமற்றோர் வாய்ச் சொல் அருளீர்

ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்"[8]

என்னும் பாடல் வாிகள் பாவேந்தாின் செவிகளைத் தொட்டது. 1906ஆம் ஆண்டு பாரதியார் நாட்டு விடுதலைக்காக 'இந்தியா' என்னும் தனது இதழில் அனல் பறக்கும் வண்ணம் தனது கருத்துக்களைப் பதிவிட்டு வந்த நிலையில், பாரதியாரின் கருத்தானது பாவேந்தரை அக்கினிக்குஞ்சாகப் பிறப்பெடுக்கச் செய்தது. இதன் பயனாக விடுதலை இயக்கப் பணிகளைப் பாவேந்தர் முன்னெடுத்து நிகழ்த்தினார். பாரதியாரின் கருத்துக்களை அடியொற்றியவராய் ஆரவாரமின்றி தம் இயக்கப்பணியை மேற்கொண்டார்.

**விடுதலை இயக்கப்பணிகள்**

பாவேந்தரின் விடுதலை இயக்கப்பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- "விடுதலை வேட்கை
- பொதுவுடமைப்புரட்சி

- சமத்துவப்பார்வை
- பெண்ணுரிமை
- பகுத்தறிவு
- மக்களாட்சி அரசியல்
- தமிழுரிமை

என்னும் இவை அனைத்தும் தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைத்திட வேண்டும் என்றும் அறிவுறித்தினார்."[9] அதன்படி தமது கொள்கையினை மக்களின் மனதில் நிலைநிறுத்திப் புரட்சியை ஏற்படுத்தினார். ஊருக்கும், நாட்டுக்கும் பணியாற்றியதோடு மட்டுமல்லாது அரசியலில் பங்கெடுத்ததன் விளைவால் பேராசிரியர் பணியில் இருந்து நீக்கப்பட்டார். பாவேந்தர் அரசியலில் பங்கேற்றதால் ஒராண்டு சிறைவாசத்தினையும் அனுபவித்தார்.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னரும் விடுதலை இயக்கப்பணிகளை மேற்கொள்ள நாட்டுப்பற்றாளர்களோடு இணைந்து பணியாற்றினார்.

**பாவேந்தரும் ஆயுதமும்**

வங்கத்து 'வந்தே மாதரம்' இதழில் வெளிவந்த பாரததேவி உருவத்தினை மண்பொம்மையாகச் செய்கின்றார் பாரதியார். பாரததேவி சிலை செய்யப் புதுவை அருகேயுள்ள குயவர்பாளையத்திலிருந்து வைத்தியலிங்க பத்தரைப் பாவேந்தர் அழைத்து வருகின்றார். பாரததேவியின் சிலையும் செய்தாயிற்று. அதனை விற்பனைக்கும் எடுத்துச் சென்றனர். உள்ளூரில் விற்கப்பட்ட பொம்மைகள் போக எஞ்சிய பொம்மைகளைப் பெட்டியில் அடுக்கிச் சென்னை நோக்கிப் புறப்பட்டார் பாவேந்தர். சென்னையில் நடைபெறுகின்ற கண்காட்சியில் விற்பனை செய்யும் நோக்கத்தோடு சென்னை அண்ணாப்பிள்ளை தெருமுனையில் "புதுச்சேரியைச் சேர்ந்த க.ப.நாராயணனின் கடை ஒன்று உள்ளது. அங்கே பெட்டியை வைத்துவிட்டு உரையாடிக்கொண்டிருந்த போது சென்னை ரவுடிகள் சிலர் தாக்குதலை நடத்தினர். அத்தகைய தாக்குதலை எதிர்கொண்டமை பற்றிக் குடும்ப விளக்கு நூலில் விரிவாகக் கூறியுள்ளார்."[10]

இச்செய்தி வியப்பினை ஏற்படுத்துகின்றது. காரணம் அவை வெறும் மண்பொம்மை அல்ல. உள்ளே இருந்தவை பிரான்சு நாட்டுத் துப்பாக்கிகள். அவை புதுவையில் எளிதாகவும், மலிவாகவும் காணப்பெறுபவை அத்தகைய துப்பாக்கியினைப்

பாரததேவியின் மண்பொம்மையில் வைத்து, சுங்கத்துறை அதிகாரிகளை ஏமாற்றி சென்னைக்குக் கொண்டு சென்று தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் கையில் சேர்க்கப் பாவேந்தர் உதவினார். ஏனெனில் அவை ஒவ்வொன்றும் ஆங்கிலேயே அதிகாரிகளின் உயிரைக் கொல்லும் ஒரு ஆயுதமாக செயல்படும். அதுமட்டுமில்லாது தாயக விடுதலைக்கு என்னால் இயன்ற சிறு உதவி என்று பாவேந்தர் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவுகின்றார்.

இந்நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு “விடுதலை வீரர் வாஞ்சிநாதன் மணியாச்சியில் ஆட்சியர் ஆஷ்துரையைச் சுட்டுக்கொல்லப் பயன்படுத்தியது பாவேந்தர் கொண்டு வந்த கள்ளத்துப்பாக்கிகளுள் ஒன்று என்று கூறப்பெறுகின்றது.”[11] மேலும் வாஞ்சிநாதன் திருவிதாங்கூர் அரசில் வனத்துறை அலுவலராகப் பணியாற்றியவர். வ.வே.சு.ஐயாின் துப்பாக்கி சுடுவதற்கான பயிற்சியினைப் புதுச்சோியில் தங்கியிருந்து கற்றுக்கொண்டார். ஆஷ்துரையை சுட்டுக்கொன்றதும் தன்னைத் துரத்தி வருகின்ற காவலாின் பிடியிலிருந்து தப்பிக்க தற்கொலை செய்துகொண்டார். வாஞ்சிநாதன் இறுதியாகக் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்தார். அதில் இந்தியாவில் மீண்டும் பழைய தர்மம் கொண்டு வரப்படுமேயானால். இங்குள்ள ஆங்கிலேயர்கள் அனைவரும் கொன்று குவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் எழுதியிருந்தார்.

தமிழகத்தில் காந்தியடிகளின் சகாப்தம் உருவாகும் போது பிராமணர் அல்லாதவர்கள் ஏற்படுத்திய நீதிக்கட்சி மற்றும் பிற புதிய இயக்கங்களும் எழுச்சி பெற்றன. ஒரு சில ஆங்கிலேயே அதிகாரிகளைக் கொலை செய்வதால் மட்டுமே சுதந்திரம் அடைந்திட முடியாது என்பதை உணர்ந்து இருந்தனர். அதே நேரத்தில் பாரதியார், பாரதிதாசனின் படைப்புகள் அனைத்தும் சுதந்திர வேட்கையைத் தூண்டும் வண்ணம் அமைந்திருந்தன. அவை பெரும்பாலும் சந்தேகத்திற்கு இடமளிக்கா வண்ணம் காணப்பெற்றன.

இழிவைத் துடைப்பது, அறிவை வளர்ப்பது, தாயகப்பற்றை, தாய்மொழிப்பற்றையும் ஊட்டுவது, கடமை எனப் பாவேந்தர் முனைந்து செயலாற்றியுள்ளார். அதுமட்டுல்லாது பாரதியாரின் இறப்பிற்குப் பிறகு பாவேந்தாpன் எழுத்துப் பணியானது இன்றியமையாத ஒன்றாக அமைந்தது.

**பாவேந்திரின் படைப்பு**

ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிராக இல்லாதவர்கள் மீதும் சென்னையிலும், புதுவையிலும் பொய் வழக்குகள் புனையப் பெற்று வந்த நிலையில் பாவேந்தர் அவர்கள் எழுச்சி மிக்கவராகச் சில படைப்புகளைப் படைத்தார். அவை,

- உயிர் துடிப்பும்
- புதுச்சுவையும் புத்துணர்ச்சியும்
- விடுதலை வேட்கையும்
- வெண் சொற்கள்
- கதர் இராட்டினப்பாட்டு

என்று படைப்புகளைப் படைத்தளித்தார் அதில் மிக முக்கியமான ஒன்று கதர் இராட்டினப்பாட்டாகும். பல ஆண்டுகளாகக் கவிஞர் பாடிவந்த பாடல்களில் தொகுப்பாக ‘மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர்’ துதியமுது 1925இல் வெளிவந்தது.

“ஆழ்கடல் புவிமே லெமக்கினி

தான பாரத பூமியை நீ

அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய் - வானில்

எட்டவே உரிமைக்கொடி தூக்குவாய்”[11]

என மயிலம் முருகனிடம் வேண்டிய பாவேந்தரது நடையிலே பழமைச் சொல்லும் அதில் புதுமையான விடுதலையுணர்வும் கலந்து இவ்வுலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

விடுதலை இயக்கத்திற்குத் துணைபுரியும் நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய நூல்கள் சில. அவற்றுள் ஒன்று “கூவாலோ கருங்குயிலே” எனக் குயிலை நோக்கி 1931 ஆம் ஆண்டு இவர் எழுதிய கவிதையாகும். இது மிகவும் புகழ்பெற்றது.

- சீறும் பகைவருக்குச் செந்தமிழர் கைத்திறத்தைக் கூறும் (1946)
- சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்
- தொண்டர் படைப்பாட்டு
- வர்ண மெட்டுகளில் தேசிய கீதங்கள்

- தேசியத் தாலாட்டுகள்
- தேசிய விடுகவிகள்
- தேசிய விளையாட்டுப் பாடல்கள்
- நிலாப்பாட்டு
- தாய்ப்பாட்டு

என்பன பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகளாகும். இவை அனைத்தும் விடுதலையுணர்வினை மக்களுக்குத் தூண்டிடும் வகையில் அமையப்பெற்ற பாடல்களாகும்.

**பாரதிதாசனும் காந்தியமும்**

1930 முதல் 1947 வரையிலான 18 ஆண்டுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட நிகழ்வுகளில் பல வியக்கத்தவையாக உள்ளன. அதிலும் குறிப்பாக காந்தியப் பின்னணியில் தோற்றம் தந்த ஒத்துழையாமை, தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, அன்புநெறி, அகிம்சை ஆகியவை பற்றிக் கிடைத்திடாத அரிய நூல்கள் கவிதா மண்டலம் வெளியிட்ட இதழில் தனிப்பாடல்களாக இடம் பெற்றுள்ள நிலையில் அதனைக் கண்ட பாவேந்தர் மேற்கண்ட இயக்கப் பின்னணியில் நின்று தனது நாட்டுப்பற்றினை வெளிப்படுத்தினார். சுயமாpயாதை இயக்கத்தோடு தொடர்புற்ற பின்பும் பாரத நாட்டின் விடுதலைப் பற்றாளராக இருந்தார். ஆனால் மக்களின் அடிமைநிலை கண்டு அடிமைநிலையை அகற்றுவதே முதல்பணி என்ற நிலைமாறி அடிமைநிலையினைக் களைந்திடப் பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டார் பாவேந்தர்.

**தொகுப்புரை**

தமிழிலக்கியப் பரப்பில் தனக்கெனத் தனித்ததொரு இடத்தைப் பெற்றுள்ள பாவேந்தர் பாரதிதாசன் சிறுவயதிலே ஆங்கிலேயரின் அடிமைத்தனத்தைக் கண்டு வெகுண்டு விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பாரதியாரின் நட்பு இவருக்குத் தேசிய தலைவர்களுடனான தோழமையை ஏற்படுத்திக் கொடுத்தது. இவரின் விடுதலைக் கவிதைகள் பாரதியாரின் பாராட்டைப் பெற்றன. விடுதலை வேட்கை, பொதுவுடமைப்புரட்சி, சமத்துவப்பார்வை, பெண்ணுரிமை, பகுத்தறிவு, மக்களாட்சி அரசியல், தமிழுரிமை போன்ற சிந்தனைகளையும் தம்

விடுதலைக்கருத்துகளோடு இணைத்துப் பரப்பினார். விடுதலைப்போரில் ஊறுசெய்யாத காந்தியின் அகிம்சை நெறியை மட்டுமன்றி ஆயுதநெறியையும் கைக்கொண்டு விடுதலைக்காக இவர் ஆற்றிய பங்களிப்பு மறுக்கமுடியாதது.

**சான்றெண் விளக்கம்**


1. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D

2.மா.செல்வராஜ், பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவிஞர், பாரிநிலையம், சென்னை-108, முதற்பதிப்பு,1986, ப.17

3. https://www.bdu.ac.in/misc/bharathidasan/resources/kavithaigal/k004.pdf ப .61

4.மேலது, ப.62

5.சு.உஷாராணி, பாரதியார் கட்டுரைகள், வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை, முதற்பதிப்பு, 2019, ப.148

6. www.tamil and vedas.com, பாரதியாரும் ஆதிசங்கரரும், பார்வை: 10-04-2022

7.ம.பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம் தொகுதி - 1, பூம்புகார் பதிப்பகம், சென்னை-108, முதற்பதிப்பு,1983, ப.56

8.https://tamilandvedas.com/2012/09/10/%E0%AE%9A%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%89%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%B5%E0%AF%81E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8D/amp/

9.மா.செல்வராஜ், பாரதிதாசன் கனல்கள், பாரிநிலையம், சென்னை-108, முதற்பதிப்பு,1985, ப.43

10.வ.உ.சி, வ.உ.சி கண்ட பாரதி, சந்தியா பதிப்பகம், சென்னை-106, முதற்பதிப்பு, 1946, ப.425

11.மன்னர்மன்னன் - கருப்பு குயிலின் நெருப்பு குரல், பைந்தமிழ் பதிப்பகம், திருப்பூர் -4, முதற்பதிப்பு, 1989, ப.90